24th February 1961]

The Hon. Sri R. VENKATARAMAN : அருப்புக்கோட்டை, பரமக்குடி, மானாமதுரை இந்த இடங்களில் 12 ஆயிரம் ஸ்பின்டில்ஸ் கொண்ட மூன்று மில்கள் ஏற்படுத்தப்படும். இது தவிர இரண்டு புது மில்கள் திருவாடானை, ராமனாதபுரம் என்ற இடங்களில் ஏற்படுத்தவும் ஏற்பாடாகி வருகின்றன.

Sri SOWDI S. SUNDARA BHARATHI : If the handloom weavers in Ramanathapuram district come forward to start a co-operative spinning mill, will the Government give their support to such a move?

The Hon. Sri R. VENKATARAMAN : So far as the State Government is concerned we are not very much concerned whether the mills come up in the private sector, public sector or under co-operative fold. We want the mills to come up. Whoever comes first, we accept. We got a few mills now in the private sector. Therefore they were immediately accepted.

Sri M. KALYANASUNDARAM : புதிதாக ராமனாதபுரம் ஜில்லாவில் ஏற்படுத்தவிருக்கும் மில்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்பின்டில்கள் நமது ராஜ்யத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஸ்பின்டில்களைவிட அதிகமானவையா? அல்லது ஏற்கனவே ஒதுக்கப்பட்டு மூடப்பட்ட மில்களிலிருந்து இந்த ஸ்பின்டில்கள் மாற்றப்பட்டிருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த அடிப்படையில் இந்தக் கேள்வியைக் கேட்கின்றார்களோ அந்த அடிப்படையே தவறு என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் என்று தனியாக ஸ்பின்டில்கள் ஒதுக்கப்படுவதில்லை. ஸ்பின்டில்கள் லாப்ஸாகி விட்டால் அவைகளை மொத்தமாக (பூலில்) சேர்த்து கொண்டு பின்னால் கொடுப்பதுதான் வழக்கம். இந்த ராஜ்யத்தில் தனியாக முன்னால் ஒதுக்கப்பட்டு இப்போது திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுவது சரியல்ல. இப்போது வந்திருக்கின்ற ஸ்பின்டில்கள் எல்லாம் பிற்போக்கு பகுதிகள் என்று கருதிதான் அதிகமாக நமக்கு கிடைத்திருக்கின்றன.

*** 456 Q.—Sri V. K. KOTHANDARAMAN :** கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வட ஆற்காடு ஜில்லாவில் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக கூட்டுறவு நூல் ஆலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

The Hon. Sri R. VENKATARAMAN : An application for a licence to start a co-operative spinning mill in North Arcot district is under the examination of the Government.

Sri V. K. KOTHANDARAMAN : ஸார், வட. ஆற்காடு ஜில்லாவிலே கூட்டுறவு நூல் ஆலை ஏற்படுத்தும் விஷயமாக யார் யார் முடிவு செய்யக்கூடிய நிலையில் இருக்கிறார்கள், எந்த இடத்திலே, எத்தனை ஸ்பின்டில்கள் என்ற விபரங்களைச் சொல்ல முடியுமா?

[24th February 1961

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு அப்ளிகேஷன் வந்தவாசியில் வைக்கவேண்டுமென்று வந்திருக்கிறது. அது சர்க்காருடைய பரிசிலனையில் இருக்கிறது. ஸ்பின்டில்கள் அதிகமாகக் கிடைக்குமானால் மேற்கொண்டு வற்புறுத்த முடியும்.

SRI V. K. KOTHANDARAMAN : கைத்தறி நெசவுத் தொழிலுக்காக ஆரம்பிக்கப்படக்கூடிய கூட்டுறவு நூல் ஆலை கைத்தறி அதிகமாக இருக்கக்கூடிய பகுதியில் ஏற்படுத்தவேண்டுமென்பது சர்க்காருடைய கொள்கையா, அல்லது எந்த இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்பது கொள்கை என்பதை விவரமாகச் சொல்ல முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதில் பிரமாதமாக ஒரு கொள்கையும் சொல்வதற்கில்லை. எந்த இடத்திலாவது ஒரு மில் வந்துவிட்டால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லோருக்கும் உதவியாக இருக்கும். வட ஆற்காடு ஜில்லாவில் வந்தவாசியில் வைக்கவேண்டுமென்று அப்ளிகேஷன் வந்திருக்கிறது. ஆனால் லைசென்ஸ் கொடுத்துவிடவில்லை. இன்னும் சர்க்கார் பரிசீலனைதான் செய்துகொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் நமக்கு இன்னும் ஸ்பின்டில் ஒதுக்கினால்தான் மில்கள் ஏற்படுத்த முடியும்.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலில் மத்திய சர்க்கார் இன்னும் ஸ்பிண்டில் ஒதுக்கினால்தான் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதிக ஸ்பின்டில்கள் ஒதுக்கவேண்டுமென்று நம் சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறார்களா ? மத்திய சர்க்காருக்கு சென்னை சர்க்காரிலிருந்து அதிக ஸ்பிண்டில்கள் ஒதுக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கை வரவில்லை என்று பார்லிமெண்டில் பதில் சொல்லப்பட்டிருப்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ராஜ்ய சர்க்கார் இதைப்பற்றித் தீவிரமாக மத்திய சர்க்கார் மட்டுமல்லாமல் இன்னும் எவரெவர்களிடத்தில் எடுத்துச் சொல்லவேண்டுமோ அவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதியிருக்கிறது—எடுத்துக் கூறியும் இருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்லக்கூடிய விஷயத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. மத்திய சர்க்கார் எங்களுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் "உங்களுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டோம், மேலும் மேலும் தொல்லை தொந்திரவு செய்கிறீர்களே" என்று கேட்டிருக்கிறார்கள்.

SRI V. SUBBIAH : ஒரு ஜில்லாவிற்கு நூற்பு ஆலை கொடுப்பதிலே குறிப்பாக மூலப்பொருள் எங்கு இருக்கிறதோ அந்தப் பிரதேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ராமநாதபுரம் ஜில்லாவிலே. . . . .

MR. SPEAKER : இந்தக் கேள்வி வட ஆற்காட்டைப் பற்றியது. ராமநாதபுரத்தைப் பற்றிய கேள்வி முன்பே முடிந்துவிட்டது.

24th February 1961]

Sri V. SUBBIAH : முக்கியமாக பஞ்சு உற்பத்தியாகக்கூடிய இடங்களில் நூற்பு ஆலை ஏற்படுத்தவேண்டுமென்பது அரசாங்கத்தின் கொள்கையா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : இன்றைக்கு இருக்கக்கூடிய பொருளாதார நிலைமையில் பஞ்சு உற்பத்தியாகக்கூடிய இடத்தில்தான் வைக்கவேண்டுமென்ற அவசியமில்லை. பஞ்சை வேறு இடத்திலிருந்து கொண்டு வந்து நூல் உற்பத்தி செய்யலாம். எந்த இடம் பின்தங்கிய பகுதியாக இருக்கிறதோ அங்கு வைப்பதற்காக வற்புறுத்தி வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

Sri M. KALYANASUNDARAM : அதிக ஸ்பின்டில் ஒதுக்கப்படவேண்டுமென்று தொழிலமைச்சர் அதிகப்படியான முயற்சியெடுத்துக் கொண்டிருப்பது உண்மை. அப்படியிருந்தும் மத்திய சர்க்கார் அமைச்சர் ஏன் பார்லிமெண்டில் அந்த மாதிரி பதில் கொடுத்தார் என்று அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பாரா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : It cannot be a subject-matter of question.

Mr. SPEAKER : The hon. Member, Sri M. Kalyanasundaram cannot ask the Hon. Minister why the Central Minister said all those things. It is out of order.

Sri A. A. RASHEED : May I know, Sir, whether there is any likelihood of having a spinning mill in North Arcot district at all?

The Hon. Sri R. VENKATARAMAN : I just now said that an application for a spinning mill in Wandiwash has been received. We want to have as many spinning mills as possible. Beyond that I cannot commit the Government.

Industrial Co-operative Banks

*** 457 Q.—Sri P. G. MANICKAM** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கைத்தொழில் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், சிறு தொழில்களுக்கும், சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் நிதி உதவி அளிப்பதற்காக கைத்தொழில் கூட்டுறவு பாங்குகளை நிறுவுவதுபற்றி அரசாங்கத்தாரால் ஆராய்ச்சி நடத்தப்பட்டு வருகிறதா ?

(இ) அப்படியாயின் இக்கூட்டுறவு பாங்குகள் எங்கே நிறுவப்படும் ?

(உ) இப்பாங்குகளிலே மூலதனமாக எவ்வளவு தொகை அரசாங்கத்தாரால் போடப்படும் ?

(எ) எப்போது, இப்பாங்குகள் ஆரம்பிக்கப்படும் ?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) to (d) The Working Group on Industrial Co-operatives constituted by the Government of India has recommended the establishment of